**பிடபெத்தர பிரதேச சபை - 2022**

-----------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பிடபெத்தர பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பிடபெத்தர பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய மற்றும் மீளாய்வாண்டில் சபைக்கு சொந்தமான ஆதனங்களை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 4,441,297 செலவு மூலதனப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 2,150,000 தொகையினால் நிர்மாணவேலைக் கடன்பட்டோர் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 806,247 தொகைக்கான பலவினச் செலவுகளுக்காக பலவினக் கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | நிலையான சொத்துக்கள் தன்மையில் காணப்படாத ரூபா 190,079 தொகை பெறுமதியான 209 பொருட் பதிவேட்டுப் பண்ட விடயங்கள் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் | சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (உ) | கடந்த ஆண்டுகளில் மற்றும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் மீதி ரூபா 8,416,405 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய கூட்டுத்தொகை ரூபா 17,130,589 தொகைக்கான 07 கணக்கு விடயங்களுக்கு உரிய மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளில் இடையே ரூபா 575,657 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | 2023 ஆண்டில் சரி செய்யப்படும் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விரிவான அட்டவணைகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல்கள் ஆகிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 1,335,762 தொகைக்கான 06 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | அட்டவணைகள் காணப்படவில்லை என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571 | ரூபா 698,124 தொகைக்கான காலவதியான பலவின வைப்புக்கள், கேள்வி வைப்புக்கள் மற்றும் மூன்று மாத பிணை வைப்பு மீதி தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 19,640,754 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 5,339,119 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,687,000 | 1,500,829 | 1,700,085 | 1,700,329 | 1,640,000 | 2,462,123 | 1,413,173 | 1,899,585 |
| வாடகை | 23,053,480 | 18,802,283 | 18,542,216 | 2,708,797 | 5,295,000 | 3,051,965 | 2,693,584 | 2,448,730 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,155,100 | 1,525,768 | 1,525,768 | 71,522 | 860,100 | 720,863 | 719,863 | 71,522 |
| ஏனைய வரு மானங்கள் | 4,246,500 | 1,318,150 | 1,480,786 | 257,006 | 2,722,000 | 435,747 | 1,107,262 | 419,642 |
| மொத்தம் | 30,142,08 | 23,147,030 | 23,248,855 | 4,737,654 | 10,517,100 | 6,670,698 | 5,933,882 | 4,839,479 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 134(1) இற்கு இணங்க சபையின் அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு 2021 ஜனவரி 22 திகதிய 2212 இலக்கங் கொண்ட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டிருந்த வீதவரி அறவீடு | கணிப்பீடு முடிவடைந்த பின்னர் பெறுமதி மதிப்பீட்டு விடயங்கள் மேற்கொள்ளப்படும் என. | விரைவாக வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்காக 2021 ஏப்ரல் 12 திகதி சபை அங்கீகாரம் கிடைத்திருந்தது. எனினும் கணக்காய்வுத் திகதியாகிய 2023 பெப்ரவரி 09 திகதி வரை வீதவரி ஆதனங்கள் பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 318,851 தொகையாக காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு அது ரூபா 327,982 தொகையாக இருந்தது. | நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | சபைக்கு சொந்தமான 120 கடை அறைகள் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அவற்றில் வாடகையாளர்கள் 66 பேரிடம் ரூபா 2,230,472 இற்கான கடை அறை வாடகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 857,230 இற்கான மீதிகளின் நிலுவையாகக் காணப்பட்ட காலஎல்லை 03 வருடங்களை மிகைத்திருந்தது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 திசெம்பர் 31 திகதி அளவில் சபைக்கு சொந்தமான 60 கடை அறைகளுக்கான கடை வாடகை உடன்படிக்கைகள் நாளது வரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | கடை வாடகை உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உடன்படிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவில் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 450,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 12,173,919 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | அறவீடு செய்வதற்காக உள்ளூராட்சித் திணைக்களத்திடம் வேண்டப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹோட்டல் ஒன்றில் இருந்து 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 149 இற்கு இணங்க கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அறிவுறுத்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என. | அதிகார சட்டத்திற்கு இணங்க வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவிற்கு இணங்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தை சேர்ந்த நகர்சார் அல்லாத எல்லையுள் கட்டிட வரைவு மற்றும் காணிகள் துணைப் பகிர்வு அங்கீகரிப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக துணை விதிகள் சட்ட ஆக்கம் செய்யப்படவில்லை. | துணை விதிகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | துணைவிதிகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபைக்குச் சொந்தமான 08 ஏக்கர் 01 ரூட் 11.86 பர்சஸ் அளவலான 08 காணித் துண்டுகள் மற்றும் பரப்பளவு தொடர்பான தகவல்கள் சமர்ப்பித்திருக்காத 04 காணிகளின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | 2016 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை 180 கட்டிட அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 15 இற்கு மாத்திரம் இணக்கச் சான்றிதழ் பெற்றிருந்தது. | இணக்கச் சான்றிதழ் வழங்கும் அலுவல்கள் முறைப் பிரகாரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அதிகாரச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆண்டிற்கான நெறிமுறை அடிப்படை மானியத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டு 2019 ஆண்டு ரூபா 966,588 இற்கான பில் பத்திரங்களின் பெறுமதிக்கு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த தங்கல வாராந்த சந்தை கட்டிடத்தின் கூரையை உரிய நியமத்தில் நிர்மாணித்திருக்காமையின் காரணத்தினால் மலைநீர் ஒழுகல் ஒன்று நடைபெறுவதுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் சுமார் 1½ வருட காலம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | காணப்படும் குறைபாடுகளை சரி செய்த பின்னர் மீண்டும் சந்தையை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறைபாடுகளை சரி செய்து பயன்படுத்த வேண்டும். |

## 3.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொஸநில்கொட ருஸியகலவேல்ல பாதையை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 370,859 தொகை செலவிடப்பட்டு இருந்ததுடன், விடய இலக்கம் 03 இன் கீழ் 602 கனமீற்றர் மண் எடுத்துச் செல்வதற்காக TI 006 ரேட்டுக்குப் பதிலாக TI 002 பயன்படுத்தப்பட்டு இருந்தமையால் ரூபா 107,210 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | கூறுவிலைகள் பகுப்பாய்வின் படி டிரக்டர் வண்டி பயன்படுத்தப்பட்டு செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டால் அதற்காக, TI 002 பயன்படுத்த முடியும் என. | உரிய ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | கொடபொல பிரதேச சபைக்கு உரிய மொரவக கந்த நீர் தோற்றுவாயில் தொட்டி ஒன்று நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 330,000 இற்கான முற்பண தொகையொன்று ஒப்பந்தவேலை சங்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், 2023 ஏப்ரல் 21 திகதியளவிலும் நிர்மாணிக்கப்பட்ட பகுதி நீர் ஓட்டத்திற்குள்ளாகி அழிவடைந்திருந்தமையால் நிர்மாண வேலை இடைவழியில் நிறுத்தப்பட்டிருந்தது. | கொடபொல பிரதேச சபையுடன் உடன்படிக்கை மேற்கொண்டு, இணக்கம் ஒன்றிற்கு வந்து நீர்த் தொட்டியை நிர்மாணித்தல் கொடபொல பிரதேச சபைக்கு சாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு முற்பணத் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிர்மாண வேலை அலுவல்கள் முறைப் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டும். |